THE MADURA TA SANGAM

உ

சற்குருப்யோ நம:

# வேதாந்த சாஸ்திர ரத்நாவலி.

இது

திருப்பூவண மடாதிபதி
ஸ்ரீ காசிஞாநாநந்த
ஞாநாசார்ய சுவாமிகளாலும்,

சென்னை, வியாசர்பாடி,
ஸ்ரீ. கு. சிவ. மடாலயம்
குருசுவாமிகளாலும்
அச்சியற்றப் பெற்றது.

சென்னை
ஆர்யகலா அச்சுக்கூடம்.

1923

## வேதாந்த · சாஸ்திர ரத்நாவலியிலுள்ள சாஸ்திரங்கள்.

1. நாநாஜீவ வாதக் கட்டளை.
2. கீதாசாரத் தாலாட்டு.
3. சசிவர்ன போதம்.
4. மஹாராஜா துறவு.
5. வைராக்கிய சதகம்.
6. வைராக்கிய தீபம்.
7. இலக்ஷணை விருத்தி.
8. வேதாந்த சூடாமணி.
9. கைவல்லிய நவநீதம்.

# புத்தக விளம்பரம்.

| | ரூ. | அ. |
|---|---|---|
| ஸ்ரீ ஆன்மபுராணம் | 8 | 0 |
| பகவத்கீதை கூடார்த்த தீபிகை | 5 | 0 |
| வேதாந்தமாந சிந்தாமணி | 4 | 0 |
| நியாயப் பிரகாசம் | 4 | 0 |
| தத்துவாநு சந்தானம் | 2 | 8 |
| கைவல்லியம் (ஸ்ரீ. பொ. உரை) | 3 | 0 |
| கீதாத்திரயம் | 2 | 0 |
| சித்தாந்த லேச சங்கிரஹம் | 1 | 0 |
| நியாய முக்தாவலி | 0 | 10 |
| அநுகீதை | 0 | 10 |
| உபதேச சகஸ்ரீ | 0 | 12 |
| ஆத்திச்சூடி பாகியாந்தரார்த்தம் | 0 | 8 |
| பிரமகீதை மூலம் சுத்தப்பதிப்பு | 0 | 5 |
| ஸ்ரீ பஞ்சாட்சர பாஷியம் | 0 | 4 |
| பர்த்ருஹரி வைராக்கியசதகம் | 0 | 3 |
| சொரூபாநுசந்தாநம் | 0 | 3 |
| கிரதிசயாநந்தத்திரட்டு | 0 | 3 |
| வேதாந்த முக்தாவலி | 0 | 6 |

விலாசம் :—குருசுவாமிகள்,

ஸ்ரீ. க. சிவ. மடாலயம், வியாசர்பாடி,

பெரம்பூர் பார்க்ஸ் போஸ்டு, சென்னை,

சற்குருப்யோ நம:.

# ஸ்ரீ சேஷாத்திரி சிவனார் அருளிச்செய்த

# நாநா ஜீவ வாதக் கட்டளை.

இது

திருப் பூவண மடாதிபதி

ஸ்ரீ காசிகாநந்த ஞாநாசார்ய

சுவாமிகளாலும்

ஸ்ரீ க. சிவ. மடாலயம்தரு சுவாமிகளாலும்

அச்சியற்றப் பெற்றது.

பால சுப்ரமண்ய ஸ்வாமி பிரஸ்,

சென்னை,

1922.

# சிறப்புப் பாயிரம்.

இப்பியி னிடையே யெழுமிர சதம்போ
லென்றுமா யிலகியின் பாகி
யொப்பிட வேது மின்றிய பிரமத்
துற்றிடும் பகுதி முன் னுய
வப்பிர பஞ்ச முறைமையைத் தூல
வருந்ததி நியாயமே யென்னச்
செப்பினன் யாருந் தெளிவுறச் சேஷாத்
திரிசிவ னென்னுமா தவனே.

# நாநா ஜீவ வாதக் கட்டளை.

காப்பு.

ஆனைமுக னறுமுக னம்பிகைபோ னம்பலவன், ஞானகுரு வாணியையு ணடு.

சுத்தப் பிரமமா யிருக்கின்ற சர்வ சாக்ஷியினிடத்திலே அக்கினியிற் சூடுபோல அபிந்நமாக ஒரு சத்தி உண்டு; அந்தச் சத்தி அவ் வதீதப் பிரமத்தில் அடங்கியிருக்கும் போது அதற்குச் சுத்தப் பிரம மென்று பெயர். இந்தச் சத்தி விசிரிம்பித்துச் சுத்தப் பிரமத்தை வியாபிக்கும் போது அப் பிரமம் பரை வியாபகத்துக்குள் ளிருந்தபடியினாலே அதற்குப் பரப் பிரம மென்று பெயராம். இலக்ஷண சூந்யமாயிருக்கின்ற இந்தச் சத்திக்குப் பிரமத்தினுடைய சந்நிதாநத்தில், புருட சமுகத்திலே ஸ்திரீக்கு இன்பஞ் சநித்தாற் போலஅவிகிர்த சத்துவ

ரஜஸ் தமோ குணங்கள் உண்டாயின இவற்றில் சுத்த சத்துவத்திற்கு ஆநந்த ரூப சத்தி யென்று பெயர். சுத்த ரஜஸிற்குச் சித் ரூப சத்தி யென்று பெயர். சுத்த தமஸிற்குச் சத் ரூப சத்தி யென்று பெயர். இவற்றில் காரணமான ஆநந்த ரூப சத்தி யுடனே பரப் பிரமங் கூடிச் சர்வாநந்த மென்னுஞ் சுழுத்தி யவஸ்தையை யடைகின்ற போது பரப் பிரம மென்கின்ற பெயர் போய்ப் பரமாநந்த ரென்கிற பெயர் வந்தது. இந்தப் பரமாநந்தர் சித் ரூப சத்தி யுடனே கூடிச் சர்வப் பிரகாச மென்னுஞ் சொப்பனாவஸ்தையை யடைகின்ற போது பரமாநந்த ரென்னும் பெயர் போய்த் தேசோமய ரென்னும் பெயர் வந்தது. இந்தத் தேசோமயர் சத் ரூப சத்தியுடனே கூடிச் சர்வ வியாபக மென்னுஞ் சாக்கிராவஸ்தையை யடைகின்ற போது தேசோமய ரென்னும் பெயர் போய்ப் பரிபூரண ரென்னும் பெயர் வந்தது.

இந்த அகண்ட பரிபூரண சச்சிதாநந்தப் பிரமத்தினிடத்திலே சுத்தியில் ரஜதம் போல மூலப் பிரகிருதி யென்னும் ஒரு சத்தி உண்டு. அந்த மூலப் பிரகிருதியும் விகிர்த குணமாகிய முக்குணத்தோடுகூடியிருக்கும். அந்தப் பிரகிருதியின் சத்துவ குணத்தை மாயை யென்றும், சர்வக்ஞ வுபாதி யென்றும், ஈசுர காரண சரீர மென்றுஞ் சொல்லப்படும். இந்த மாயையினிடத்திலே நிர்மல சலப் பிரதிவிம்பம் போலப் பிரமம் சுலட்சணமாகப் பிரதிவிம்பிக்கும். இந்தப் பிரதிவிம்ப சைதந்நியத்தைச் சர்வக்ஞனாகிய ஈசுர னென்று சொல்லப்படும். இந்தச் சத்துவ குண மாயையினிடத்திலே சத்துவத்தில் சத்துவம், சத்துவத்தில் ரஜஸு, சத்துவத்தில் தமஸு என மூன்று குணங்கள் உண்டு. இவைகளில் சத்துவத்தில் சத்துவம் பிரதானமாகும் போது அதில் பிரதிவிம்பித்த ஈசுரன் சகத்தை இரக்ஷிக்கை

யினால் விஷ்ணு வென்றும், சத்துவத்தில் ரஜஸு பிரதானமாகும் போது அதில் பிரதிவிம்பித்த ஈசுரன் சகத்தைச் சிருஷ்டிக்கைகையினால் பிரமா வென்றும், சத்துவத்தில் தமஸு பிரதானமாகும் போது அதில் பிரதிவிம்பித்த ஈசுரன் சகத்தை உபசம்மாரம் பண்ணுகையினால் உருத்திர னென்றுஞ் சொல்லப்படுவன். இப்படி மூலப் பிரகிருதியின் சத்துவ குண கற்பனை சொல்லப்பட்டது.

இனி, மூலப் பிரகிருதியின் இராஜோ குணம் அநேக ரூபமாய்ப் பிரிந்து அவித்தைக ளென்றும், சீவ காரண சரீரங்க ளென்று மொன்றற் கொன்று தார தம்மிய மாகச் சொல்லப்படும். இந்த அவித்தைகளிடத்திலும் மலின சலப் பிரதிவிம்பம் போலப் பிரம சைதந்நியம் பிரதிவிம்பிக்கும். இந்தப் பிரதிவிம்ப சைதந்நியங்களை கிஞ்சிக்ஞ ரென்றும், சீவ சிதாபாச ரென்றும், பிராக்ஞ னென்றுஞ் சொல்லப்படும். இந்த அவித்தைக ளிடத்திலேயும் ரஜஸில் சத்து

வம், ரஜஸில் ரஜசு, ரஜஸில் தமசு என மூன்று குணங்கள் உண்டு. இராஜஸில் சத்துவம் பிரதாநமாகும் போது அதில் பிரதிவிம்பித்த சிதாபாசன் தத்துவக் ஞாந நிஷ்டனாவன். இராஜஸில் ரஜசு பிரதாநமாகும் போது அதில் பிரதிவிம்பித்த சிதாபாசன் காமக் குரோத பரனாய்க் கர்ம நிஷ்டனாவன். இராஜஸில் தமசு பிரதாநமாகும் போது அதில் பிரதிவிம்பித்த சிதாபாசன் சோம்பல், நித்திரை, மயக்கம் ஆகிய இவைகளை யடைவன்; இப்படி மூலப் பிரகிருதியின் இராஜோ குண கற்பனை சொல்லப்பட்டது.

இனி, மூலப் பிரகிருதியின் தமோ குணத்திற்கு ஆவரணம், விக்ஷேபம் என இரண்டு சத்திகள் உண்டு. இவ்விரண்டில் ஆவரண சத்தியானது தத்துவ ஞாநியையும் ஈசுரனையுந் தவிர மற்றைச் சீவருக் கெல்லாம் சரீரத்திரயம், சிதாபாசன், சாக்ஷி சை

தந்நியம் என்னு மிவைகளின் ஒன்றற் கொன்றுள்ள பேதந் தெரிய வொட்டாமல் மறைக்கும். இதனால் மறைபட்ட சீவர் இருபத் தொன்பது தத்துவங்களையும் ஒரு மைப்பாடாக நா னென் றபிமாநிப்பர். இந்த அபிமாநத்தை அகங்காரக் கிரந்தி யென்றும், சம்சார பந்த மென்றுஞ் சொல் லப்படும். சற்குரு கடாக்ஷத்தினாலே இந்த ஆவரணம் நீங்கி இருபத்தொன்பது தத்து வங்களின் ஒன்றற் கொன்றுள்ள பேதந் தெரிகின்றதே முத்தி; இப்படி ஆவரண சத்தியின் காரியஞ் சொல்லப்பட்டது.

இனி, விக்ஷேப சத்தியினின்றும் சத்த தந்மாத்திரையான ஆகாசந் தோன் றிற்று. ஆகாசத்தினின்றும் பரிச தந்மாத் திரையான வாயு தோன்றிற்று. வாயுவி னின்றும் ரூப தந்மாத்திரையான அக்கினி தோன்றிற்று. அக்கினியினின்றும் ரஸ தந் மாத்திரையான அப்பு தோன்றிற்று. அப்புவி

னின்றும் கந்த தன்மாத்திரையான பிருதிவி தோன்றிற்று. இந்தச் சூக்ஷும பஞ்ச பூதத்திற்குக் காரணமாயிருக்கின்ற விக்ஷேப சத்தியினிடத்திலே தமஸில் சத்துவம், தமஸில் ரஜஸு, தமஸில் தமஸு என்னு மிவை அற்பங் கருவாக விருந்தபடியால் அதன் காரியமாகிய இந்தத் தன்மாத்திரை களான பஞ்ச பூதங்களும் முக் குணங்களு டனே பிறந்தன. இந்தப் பஞ்ச பூதங்கட் குத் தன்மாத்திரைக ளென்றும், அபஞ்சீ கிருத பூதங்க ளென்றும், சூக்ஷும பூதங்க ளென்றும்; முக் குண பூதங்க ளென்றும் சாஸ்திரங்களில் நாமஞ் சொல்லப்படும்.

இந்தச் சூக்ஷும பூதங்களினின்றும் சூக்ஷும சரீரங்களும், ஸ்தூல பூதங்களுந் தோன்றும். அஃது தெங்ஙன மெனின்:- ஆகாச முதலான பஞ்ச பூதங்களின் சத்து வாம்சத்திலே பூதத்திற்கு ஒவ் வொரு

மாத்திரை யெடுத்து ஒன்றாகக் கூட்டிவைத்தது அந்தக்கரணம். இந்த அந்தக்கரணத்தில் ஆகாசத்தின் அம்சங் கூடினதற் கடையாளம், இந்த அந்தக்கரணமும் ஆகாசத்தைப் போலச் சகலமான கேள்விக்கும் இடங்கொடுத்துத் தரிக்கின்றது. இப்படித் தரிக்கின்ற † விருத்திக்கு ‡ உள்ள மென்று பெயர். இந்த அந்தக்கரணத்தில் வாயுவி னம்சங் கூடினதற் கடையாளம், இந்த அந்தக்கரணமும் வாயுவைப் போல அலைகின்றது. இப்படி அலைகின்ற விருத்திக்கு மந மென்று பெயர். இந்த அந்தக்கரணத்தில் அக்கினியி னம்சங் கூடினதற் கடையாளம், இந்த அந்தக்கரணமும் அக்கினியைப் போல ஈதின்ன தென்று விளக்குவிக்கின்றது. இப்படி விளக்குவிக்கின்ற விருத்திக்குப் புத்தி யென்று பெயர். இந்த அந்தக்கரணத்தில் அப்புவி னம்சங் கூடினதற் கடையாளம், இந்த

† விருத்தி - பரிணமம். ‡ உள்ளம்- தேஜஸ— என்றும் பாட முளது.

அந்தக்கரணமும் அப்புவைப் போல விஷ யங்களிற் பற்றி இழுக்கின்றது. இப்படி இழுக்கின்ற விருத்திக்குச் சித்த மென்று பெயர். இந்த அந்தக்கரணத்தில் பிருதி வியி னம்சங் கூடினதற் கடையாளம், இந்த அந்தக்கரணமும் பிருதிவியைப் போலக் கடினமாக நின்று நா னென் றபிமாநிக்கின் றது; இந்த அபிமாந விருத்திக்கு அகங்கார மென்று பெயர்.

இன்னும், ஆகாச முதலான பஞ்ச பூத ங்களினுடைய சத்துவாம்சத்திலே பூதத் திற் கொவ்வொரு மாத்திரை யெடுத்துத் தனித்தனியே வைத்தது சுரோத்திராதி ஞா னேந்திரிய மென்று சொல்லப்படும். இவை களில் சுரோத்திரம் ஆகாசத்தி னம்சமானப டியால் ஆகாசத்தின் குணமான சத்த மாத்தி ரத்தை அறியும். துவக்கு வாயுவி னம்சமா னபடியால் வாயுவின் குணமான பரிச மாத்

திரத்தை அறியும். சக்ஷு அக்கினியி னம்ச மான படியால் அக்கினியின் குணமான ரூப மாத்திரத்தை அறியும். சிங்ஙுவை அப்புவி னம்ச மானபடியால் அப்புவின் குணமான ரச மாத்திரத்தை அறியும். கிராணம் பிருதி வியி னம்சமானபடியால் பிருதிவியின் குண மான கந்த மாத்திரத்தை அறியும். இப்படி ஐந்தும் ஒன்றோ டொன்று கூடாதபடியால் ஒன்று மற்றொன்றின் குணத்தைக் கிரகிக்க வறியாது. அந்தக்கரணத்தில் ஐந்து மாத் திரையும் ஒன்றாய்க் கூடினதுகொண்டு ஐந் திந்திரியங்களினாலும் ஐந்து விஷயங்களை யும் அறியும். இந்தச் சத்துவ குணத்தி லுண்டான அந்தக்கரணம் ஐந்தும், ஞானேந் திரியம் ஐந்தும் ஆகப் பத்தும் சத்துவாம்ச மானபடியால் ஞான சாதனமாயின.

இன்னும், ஐந்து பூதங்களினுடைய இராஜோம்சத்திலே பூதத்திற்கு ஒவ் வொரு

மாத்திரை யெடுத்து ஒன்றாகக் கூட்டி வைத்தது வியாநாதி பஞ்ச வாயுக்கள். இவை களில் வியாந வாயு ஆகாசத்தி னம்சமானபடி யால் ஆகாசத்தைப் போலச் சர்வாங்கமும் வியாபித்திருக்கும். பிராண வாயு வாயுவி னம்சமானபடியால் வாயுவைப் போல இரு தயத்தி லிருந்து நாசிகாதி பரியந்தம் அலை யும். அபாந வாயு அக்கினியி னம்சமான படியால் அக்கினியைப் போலச் சாடராக்கினி யாக உஷ்ணித்துக் கொண்டு குதத்தைப் பற்றி நின்று உண்ட வந்ந பாநாதிகளைச் சீரணிப்பிக்கும். சமாந வாயு அப்புவி னம்ச மானபடியால் சரீர நடுவான நாபித் தாநத் தினின்று உண்ட அந்ந ரசங்களை அப்பு வைப் போல இழுக்கும். உதாந வாயு பிருதிவியி னம்சமானபடியால் கண்டத் தைப் பற்றிப் பிருதிவியைப் போலக் கடிந மாகநின்று உண்ட அந்ந பாநாதிகளைக்கடை யும். இந்தப் பஞ்ச வாயுக்களையு மல்லாமல்

வாந்திபண்ணுவிக்கின்றது நாக னென்றும், இமைமத்து விழிப்பிக்கின்றது கூர்ம னென்றும், குறுகுறுத்துத் தும்மச் செய்கின்றது கிரிகர னென்றும், கொட்டாவிகொள்ளச் செய்கின்றது தேவதத்த னென்றும், வீங்கச் செய்கின்றது தநஞ்சய னென்றும் வேறே ஐந்து வாயுக்களுண்டென்று சிலர் சொல்லுவார். இவ் வைந்தும் பிராணனுடைய தொழிலானபடியால் வேறல்ல.

இன்னும், ஆகாச முதலிய பஞ்ச பூதங்களினுடைய இராஜோம்சத்திலே பூதத்திற்கு ஒவ்வொரு மாத்திரை யெடுத்துத் தனித் தனியே வைத்தது வாக்காதி கர்மேந்திரிய மென்று சொல்லப்படும். இவைகளில், ஆகாசத்தி னிடமாக வாக்கு வசனிக்கும். வாயுவினிடமாகப் பாணி இடுதல் ஏற்றல் செய்யும். அக்கினியினிடமாகப் பாதம் நடக்கும். அப்புவினிடமாகப் பாயுரு

மல சலாதிகளை வெளியிலே தள்ளும் பிருதிவியினிடமாக உபஸ்தம் சுகத்தைப் பண்ணும்; இந்த ஐந்துந் தனித் தனியே இருந்தது கொண்டு மறு தொழில் செய்ய மாட்டாது, வியாநாதி வாயுக்கள் ஐந்து மாத்திரையும் ஒன்றாய்க் கூடினது கொண்டு கர்மேந்திரியம் ஐந்தின் வழியினாலும் ஐந்து தொழில்களையுஞ் செய்து முடிக்கும், இந்த வாயுக்களைந்தும், கர்மேந்திரியங்களைந்தும் ஆகப் பத்தும் இராஜோம்சமானபடியினால் கிரியா சாதநமாயின. அந்தக்கரணம்-5, ஞானேந்திரியம்-5, வாயுக்கள்-5, கர்மேந்திரியம்-5, ஆக இருபது தத்துவமுஞ் சூக்ஷம சரீர மென்று சொல்லப்படும். இந்தச் சூக்ஷம சரீரத்தை மாயாப் பிரதிவிம்பனைக விருக்கின்ற ஈசுரன்; அவித்தையாப் பிரதிவிம்பராகிய சீவர்கள் அநேகராகையால் ஒவ் வொருவருக்கு ஒவ்வொரு சரீரமாகச் சிருஷ்டித் தளித்தான், இப்படிச் சூக்ஷம சரீர கற்பனை சொல்லப்பட்டது.

இனி, ஸ்தூல பூத வுற்பத்தி சொல்லு கின்றேம்; அஃது தெங்ஙன மெனின்:— தமோம்சமா யிருக்கின்ற ஐந்து பூதங்களை யும் ஒவ் வொன்றை இரண் டிரண்டாகப் பகுத்து முதற் பாதி ஐந்தையும் ஒவ் வொன் றை நான்கு நான்காகப் பகுத்து இரண்டாம் பாதி ஐந்தில் தன் னம்சத்துடனே கூட்டா மல் மற்றை நான்கு பூதங்களுடன் அரைக் கால் அரைக்கால் மாத்திரையாகக் கொடுக் கின்றது பஞ்சீகரண மென்று சொல்லப் படும். இப்படிப் பஞ்சீகரணம் பண்ணின தூல பூதங்களிலே ஆகாசத்திலே பரிச ரூப ரச கந்தம் ஆகிய நான்கு குணங்களும் வியாப்பியமானபடியால் அதிருசியமாய்ப் போகநிச குணமாகிய சத்தந் திருசியமாம். வாயுவிலே ரூப ரஸ கந்தம் ஆகிய மூன்று குணங்களும் வியாப்பியமானபடியினல் அதி ருசியமாய்ப் போகக் காரண குணமாகிய

சத்தமும், நிச குணமாகிய பரிசமுந் திருசிய மாம். அக்நியிலே ரஸ கந்த மாகிய இரண்டு குணங்களும் வியாப்பியமானபடியினால் அதிருசியமாய்ப் போகக் காரண குணங்களாகிய சத்த பரிசமும், நிச குணமாகிய ரூபமுந் திருசியமாம். அப்புவிலே கந்த குணம் வியாப்பியமானபடியினால் அதிருசியமாய்ப் போகக் காரண குணங்களாகிய சத்த பரிச ரூபமும், நிச குணமாகிய ரசமுந் திருசியமாம். பிருதிவியிலே காரண குணங்களாகிய சத்த பரிச ரூப ரசமும், நிச குணமாகிய கந்தமும் திருசியமாம்.

முன் சூக்ஷும பூதங்களி னின்றும் சூக்ஷும சரீரங்கள் தோன்றினாற் போலப் பஞ்சீகரணம் பண்ணின ஸ்தூல பூதங்களி னின்றும் ஆறு தத்துவமாய், நால்வகைப் பிறப்பாய், மூவகைச் சாதியா யிருக்கின்ற ஸ்தூல சரீரங்கள் தோன்றின; இவற்றுள்

ஆறு தத்துவங்க ளாவன:—சர்மம், உதிரம், மாமிசம், சநாயு, அத்தி, மச்சை இவை ளாம். நால்வகைத் தோற்றங்க ளாவன;—சராயுஜம், அண்டஜம், சுவேதஜம் உத்பிஜ் ஜம் இவைகளாம். மூவகைச் சாதிக ளாவன:—இக லோக, பர லோக புத்தி இரு வகையுங் கொடுக்கின்ற மநுட சரீரம் உத்தம சாதி. பர லோக புத்தியை மறைத்து இக லோக புத்தி மாத்திரங் கொடுக்கின்ற பசு பக்ஷி முதலானவை மத்திம சாதி. இரண்டு லோக புத்தியையும் மறைத்திருக் கின்ற மரம் கொடி, செடி, முதலியவை அதம சாதி. இப்படிப் பிருதிவி தத்துவமா யிருக்கின்ற பூலோகத்திற் கண் டாற் போல அப்பு அக்கினி வாயு ஆகாசம் என்னப்பட்ட தத்துவங்களாய் நிரை நிரை யே யிருக்கின்ற பிதிர் லோகம் தேவ லோகம் யட்ச கந்தர்வ சித்தர் லோகங்களி லும் நட்சத்திரமாகத் தோற்றுகின்ற சங்

திரன் முதலான பிதிர்க்கள், சூரியன் முதலான தேவதைகள், கந்தருவர், சித்தர் என்னப்பட்டவர்கள் உத்தம சாதி. காமதேநு, ஐராவதம், அந்நம், கருடன் முதலானவை மத்திம சாதி. கற்பக விருட்சம், பாரிசாதம் முதலானவை அதம சாதி. இந்தத் தூல சரீரமே அந்நமய கோசம், சூட்சும சரீரம் மூன்று கோசங்களா யிருக்கும். அஃது தெங்ஙன மெனின்.—பிராண வாயுவும், கர்மேந்திரியங்களுங் கூடிப் பிராணமய கோசம், மநதும் ஞானேந்திரியங்களுங் கூடி மனோமய கோசம், புத்தியும், ஞானேந்திரியங்களுங் கூடி விஞ்ஞானமய கோசம், காரண சரீரமே ஆநந்தமய கோசம்; இப்படிப் பஞ்ச கோசஞ் சொல்லப்பட்டன.

ஆறு தத்துவங்களா யிருக்கின்ற ஸ்தூல சரீரத்திலே இருபது தத்துவங்களா யிருக்கின்ற சூட்சும சரீர மிருக்கின்றது. அஃ

தெப்படி யெனின்:— கர்மேந்திரியங்களுள் வாக்கும், ஞானேந்திரியங்களுள் சிங்நுவையும் வாயி லிருக்கும். உதான வாயுவும், மநதும் கண்டத்திலே யிருக்கும். பிராண வாயுவும், புத்தியும் இருதயத்திலே யிருக்கும். சமாந வாயுவும், சித்தமும் நாபியி லிருக்கும் அபாந வாயுவும் பாயுருவும் குதத்தி லிருக்கும். வியாந வாயுவும், ஞானேந்திரியங்களுள் துவக்கும், அகங்காரமும் சர்வாங்கமும் வியாபித்திருக்கும். உச்சியிலே உள்ளமும், கருவிழி நுனியிலே சக்ஷு ரிந்திரியமும், காதிற்குள்ளே சுரோத்ரேந்திரியமும் மூக்கு நுனியிலே கிரா ணேந்திரியமும் கழுத்திற்கு மேலே தனித் தனியே யிருக்கும். கழுத்திற்குக் கீழே கை கால் குய்யங்களில் பாணி, பாதம், உபஸ்தம் மூன்றுந் தனித் தனியே யிருக்கும் இப்படித் தூல சரீர தத்துவங்கள் ஆறு, அதிற் குடி புகுந்த சூட்சும சரீர தத்துவங்கள் இருபது; ஆக தத்துவங்

கள் இருபத் தாறும் பஞ்ச பூதங்களின் காரியமான படியினாலே ஒருமைப்பாடாகக் காரிய சரீர மென்று சொல்லப்படும்.

அவித்தையிற் பிரதிவிம்பித்த சிதாபாசன் சாக்கிரத்திலே இந்த இருபத் தாறு தத்துவங்களுடனே கலந்து நின்ற போது விசுவ னென்றும், வியாவகாரிக சீவ னென்றுஞ் சொல்லப்படுவன். சொப்பனத்திலே தூல சரீரத்தை விட்டு அந்தக்கரணத்துடனே கூடி நின்ற போது தைஜச னென்றும், பிராதிபாசிக ஜீவ னென்றும், சொப்பன கற்பித னென்றுஞ் சொல்லப்படுவன். சுழுத்தியிலே காரிய சரீர தத்துவங்கள் இருபத் தாறையுங் கைவிட்டுக் காரண சரீரத்தை மாத்திரம் பொருந்தியிருக்கும் போது பிராக்ஞ னென்றும், பாரமார்த்திக சீவ னென்றுஞ் சொல்லப்படுவன், பிரம சைதந்நியமும் சாக்கிரத்திற்குச் சாக்ஷியாயிருக்கும் போது சீவாத்மா வென்றும்,

சொப்பநத்திற்குச் சாக்ஷியாயிருக்கும்போது அந்த ராத்மா வென்றும், சுழுத்திக்குச் சாக்ஷியாயிருக்கும் போது பரமாத்மா வென்றும், அவஸ்தாத்திரய சாக்ஷியாயிருக்கும் போது ஞாநாத்மா வென்றும், கூடஸ்த னென்றுஞ் சொல்லப்படும். இப்படிச் சீவ னுக்கு மூன்று சரீரங்களும், மூன் றவஸ் தைகளுஞ் சொல்லப்பட்டன.

இனி, ஈசுரனுக்கு மூன்று சரீரங்களும் மூன் றவஸ்தைகளுஞ் சொல்லும்படி கற் பிதப் பிரபஞ்ச வடிவமாகத் தோன்றுகின்ற தூல பஞ்ச பூதங்களும் அந்தப்பூதங்களிலே தோன்றிய மூன்று சாதியாயிருக்கின்ற தூல சரீர சமஷ்டியுங் கூடி ஈசுர தூல சரீர மென்றும், விராட் டென்றுஞ் சொல்லப் படும். இதனுடனேகூடிச் சாக்கிராவஸ்தை யைப் பொருந்துகின்ற ஈசுரன் வைசுவானர னென்றும், இந்த இருவகைக்கும் அதிஷ்

டாநசைதந்நியம் பிரமா வென்றுஞ் சொல்
லப்படும். சூக்ஷும பூதங்களைந்தும் அந்தப்
பூதங்களிலே தோன்றிய சூட்சும சரீர சமஷ்
டியுங்கூடி ஈசுர சூட்சும சரீர மென்றும்,
இரண்ய கர்ப்ப மென்றுஞ் சொல்லப்படும்.
இதனுடனே கூடிச்சொப்பநாவஸ்தையைப்
பொருந்துகின்ற ஈசுரன் சூத்திராத்மாவென்
றும், இந்த இருவகைக்கும் அதிஷ்டாந சை
தந்நியம்விஷ்ணுவென்றுஞ்சொல்லப்படும்.
இந்தத்தூலம் சூட்சுமம் இரண்டின் வாசனை
யுடனே கூடியிருக்கின்ற மாயை ஈசுர
காரண சரீர மென்றும், அவ்வியாகிருத
மென்றுஞ் சொல்லப்படும். இதனுடனே
கூடிச் சுழுத்தி யவஸ்தையைப் பொருந்து
கின்ற ஈசுரன் அந்தரியாமி யென்றும்.
இந்த இருவகைக்கும் அதிஷ்டாந சைதந்
நியம் உருத்திர னென்றுஞ் சொல்லப்படும்.
சீவன், தன் மூன் றவஸ்தைகளிலும் தன்
மூன்று சரீரங்களாயிருக்கின்ற இருபத்

தேழு தத்துவங்களுடனும் நா னென்று கலந்து நிற்கின்றது போல ஈசுரனுந் தன் மூன் றவஸ்தைகளிலுந் தன் மூன்று சரீரங் களாயிருக்கின்ற முப்பத்திரண்டு தத்துவங்க ளுடனுங் கலந்து நிற்பன். ஆகையினாலே சீவ சி ாபாசன் தன் சரீர மாத்திரமே கல ந்து நிற்பன். ஈசுரன், தன் சரீரமாகிய சகல சரீரங்களோடும் சகல பிரபஞ்சங்களோ டும் கலந்து நிற்பன். இந்த இருவகைக்கும் சாக்ஷியாயிருக்கின்ற பிரம சைதந்நியமும், சகல சரீரங்களிலும் சகல பிரபஞ்சங்களி லும் நிறைந்து அப்பாலும் பத்துத் திக்கை யும் அதிக்கிரமித்து எல்லையற் றிருக்கும்.

சீவனுக்குத் தூல சரீர வியவகாரத்திற் கு அந்நமயமான சட்கோச தத்துவங்கள்-6, சூட்சும சரீர தத்துவங்கள்-20, சீவன், ஈசுரன், அவித்தை, வித்தை, பிரமம் 5 ஆகத் தத்துவங்கள்-31. சூக்ஷும சரீர விய

வகாரத்திற்கு சூக்ஷ்ம சரீர தத்துவங்கள்-20, சீவன், ஈசுரன், அவித்தை, வித்தை, பிரமம்-5 ஆகத் தத்துவங்கள்-25. காரண சரீர வியவகாரத்திற்கு சீவன், ஈசுரன், அவித்தை, வித்தை பிரமம்-5. சீவ வியவகாரத்திற்குசீவன், ஈசுரன், பிரமம்-3. சாக்ஷி வியவகாரத்திற்கு சாக்ஷி-1. ஈசுரனுக்குத்தூல சரீர வியவகாரத்திற்கு சமஷ்டி அந்நமய கோச தத்துவங்கள்-6, சமஷ்டி சூக்ஷ்ம சரீர தத்துவங்கள்20, சமஷ்டி சீவன், அவித்தை 2, ஈசுரன், வித்தை, பிரமம்.3, தூல பூதங்கள்-5 ஆகத் தத்துவங்கள்-36. சூக்ஷ்ம சரீர வியவகாரத்திற்குச் சமஷ்டி சூக்ஷ்ம சரீர தத்துவங்கள் 20, சமஷ்டி சீவன், அவித்தை-2, சூக்ஷ்ம பூதங்கள்-5, வித்தை, ஈசுரன், பிரமம்-3 ஆகத் தத்துவங்கள் 30. காரண சரீரவியவகாரத்திற்குவித்தை, ஈசுரன் பிரமம்-3. ஈசுர வியவகாரத்திற்கு ஈசுரன், பிரமம்-2. பிரமவியவகாரத்திற்குப் பிரமம்.1. இந்திரிய வியவகாரத்திற்கு இந்திரியம்-1,

சட்கோச தத்துவங்கள் 6, அந்தக்கரணம்-5, வாயு-5 சீவன் ஈசுரன், அவித்தை. வித்தை, பிரமம்-5 ஆகத்தத்துவங்கள் 22. மநோராச் சியவியவகாரத்திற்கு அந்தக்கரணம்-5, சீவன் ஈசுரன் அவித்தை, வித்தை, பிரமம்-5 ஆகத் தத்துவங்கள்-10. இப்படித் தத்துவங்களினு டைய தோற்றமும், நிலையுஞ் சொல்லப்பட் டன.

இனித், தத்துவங்கள் ஒடுங்குகின்ற வழி சொல்லுகின்றோம். சகல சீவரிடத் திலு மிருக்கின்ற தூல சரீரங்க ளனைத்தும், தமக்கு ஆதாரமான தூல பூதங்களிலே மடி ந்து பூத மாத்திரமாக ஒடுங்கும். இந்தத் தூல பூதங்களும் பஞ்சீகரணம் விட்டுத் தந் மாத்திரைகளான தமோ குண பூதங்களாக மிஞ்சும் அப்போது கேவலம் இரண்ய கர்ப் பாவஸ்தை யென்று சொல்லப்படும். சூ க்ஷம சரீர தத்துவங்க ளிருபதுங் கட்டு விட் டுப் பூதங்களினுடைய சத்துவ குணமும், இராஜோ குணமுமாக ஒடுங்கும்; அஃதெதங்

நன மெனின்:— சகல பிராணிகளிடத்திலு மிருக்கின்ற அகங் காரமும், கிராணேந்திரிய மும், உதாந வாயுவும் உபஸ்தேந்திரியமும் பிருதுவியில் ஒடுங்கும் சித்தமும், சிங்ஙுவை யும், சமாநனும், பாயுருவும் அப்புவில் ஒடுங் கும். புத்தியும், சக்ஷுவும், அபாநனும், பா தமும் அக்கினியில் ஒடுங்கும். மநதும் தொக் கும், பிராணனும், பாணியும் வாயுவில் ஒடு ங்கும். உள்ளமும், சுரோத்திரமும், வியாந னும், வாக்கும் ஆகாசத்தில் ஒடுங்கும். அப் போது பழையபடியே முக் குண பூதங்களா கும். இந்தச்சூக்ஷம பூதங்களும், பிருதிவி அப்புவில் கரைந்து ஒடுங்கும் அப்புவும், அ க்கினியிற் சுவறி ஒடுக்கும். அக்கினியும் விள க்குப்போல வாயுவி லணைந்து ஒடுங்கும். வா யுவும் ஆகாசத்திலே ஒய்ந்து ஒடுங்கும் ஆகா சமும், விக்ஷேப சத்தியில் ஒடுங்கும். ஆவ ரண சத்தியும் விக்ஷேப சத்தியும் மூலப்

பிரகிருதியின் தமோ குண மாத்திரமாய் ஆல மரம் ஆலம் விரையில் ஒடுங்கினாற் போல இன்னம் ஒரு சிருஷ்டிக்கு வித்தாக மாயையிலும், அவித்தையிலும் ஒடுங்கும். இந்த மாயையும் அவித்தையும் அதி நுண் மையான மூலப் பிரகிருதி யென்று சொல் லப்பட்ட விந்து தத்துவத்தில் ஒடுங்கும். அந்த விந்துவும், பாம் பென்கின்ற பெயர் போய்ப் பழுதையாகக் கண்டாற் போலத் தனக்கு அதிஷ்டான சைதந்யமான பிரம சைதந்ய மாத்திரமாக ஒடுங்கும். இப்படிப் பொய் யெல்லாம் மெய்ப் பொருள் ஒன்றா கக் கண்டு, அதுவே சுபாவ சித்தமாய் நிச மாயிருக்கின்ற தன் வடி வெனக் கண்டு தெளிந்து கவலை கெட் டிருக்கின்றவனே சீவன் முத்தன். இப்படித் தத்துவங்களின் ஒடுக்கஞ் சொல்லப்பட்டது.

இப்படித் தோற்றி ஒடுங்கின தத்துவங்கள்-36, அவையாவன:-பூதங்கள் 5, ஸ்தூல சரீர தத்துவங்கள்-6, சூட்சும சரீர தத்துவங்கள் - 20, காரண சரீரமான மாயை, அவித்தை - 2, இவற்றில் பிரதிவிம்பித்த சீவன், ஈசுரன் - 2, இவைகட்கெல்லாம் அதிஷ்டான சைதந்நியமா யிருக்கின்ற * பிரமம் - 1, இவையாம். இவைகளில், பூதங்கள்-5, மாயை-1, மாயாப் பிரதிவிம்பரான ஈசுரன்-1, பிரமம்-1, ஆக இந்த எட்டும் சகல பிராணிகளுக்குஞ் † சமுதாயமாக வநுபவிக்கப்படும். மற்றை இருபத்தெட்டும், அவன் அவனுக்கு ‡ பிருதக்காக வநுபவிக்கப்படும். அஃதெங்ஙன மெனில், பிருதிவி தத்துவம் ஒன்று இறக்கில் எல்

---

* பிரமத்திற்குத் தோற்ற மொடுக்கங் கூறினது நாம கற்பனையைப் பற்றியென்க. † சமுதாயம்-பொது.

லாருக்கும் ஆதார மில்லை. மழை மறுக்கில் எல்லாருக்குஞ் சல மில்லை. தேயு வில்லா திருந்தால் பாக மில்லை. வாடை தென்றல் இல்லாவிட்டால் வாயு வியக்க மில்லை. ஆகாசம் இறக்கில் ஒருவருக்கும் அவகாச மில்லை. மாயையும், மாயாப் பிரதிவிம்பரும் இறக்கில் சகல சமயங்களுக்குந் தெய்வ மில்லை. பிரம மில்லையோ ஒருவருக்கும் அறி வில்லை; ஆகையால் இந்த எட்டும் எல் லாருக்குஞ் சமுதாயமாம். பிருதக்கு எங்ஙன மெனின், ஒருவனுக்கு ஸ்தூல சரீரம் இறக் கில் எல்லாருக்கும் ஸ்தூல சரீரம் இறவாத படியினாலும், சூட்சும சரீரத்தில் ஒரு வனுக்கு அங்க ¶ வைகல்யம் வந்தால் எல் லாருக்கும் வாராதபடியினாலும், முத்தரா யிருந்த சுகர், வாமதேவர் முதலியோருக்கு அவித்தையும், சீவனும் இறந்துபோ

‡ பிருதக்கு-வேறு.

¶ வைகல்யம்-குறைவு.

யிருக்க மற்றையோருக் கெல்லாம் அவித்தையும், சீவனும் இறவாதபடியினாலும் இந்த இருபத் தெட்டுத் தத்துவங்களும் அவனவனுக்குப் பிருதக் கென்பதிலே சந்தேகமே யில்லை.

இந்தத் தத்துவங்கள் முப்பத் தாறில் எப்போதும் தானாகவே காணப்படுகிற தத்துவம் ஒன்று. எப்போதும் தனக் கந்நியமாகக் காணப்படுகிற தத்துவங்கள் ஏழு, தானாகவும் தனக் கந்நியமாகவும் அநுபவிக்கப்படுகிற தத்துவங்கள் இருபத் தெட்டு; அஃ தெங்ஙன மெனில், அவஸ்தாத் திரய சாக்ஷியாயிருக்கின்ற பிரம சைதந்நியம் எல்லா வவஸ்தைகளிலுந் தானாக விளங்குகையினாலும், மற்றைத் தத்துவங்கள் போலத் தனக் கந்நியமாக விளங்காதபடியினாலும் அந்தப் பிரம சைதந்நியம் ஒன்றுமே தானாகக் காணப்படுகிறது. பஞ்ச பூதங்கள்

மாயை மாயாப் பிரதிவிம்பர் ஆக ஏழும் தந் தந் தொழிலான வெட்டு, கொத்து, உழவு, பஞ்சகிருத்தியம், தசாவதார முதலானவை ஒருகாலும் தன்னுடைய தொழிலாகக் காணப்படாதபடியினாலே தனக் கந்நியங் களே யல்லாமல் தானாகமாட்டா. மற்றை இருபத் தெட்டுத் தத்துவங்களுள்ளே நான் பிராமணன், நான் க்ஷத்திரியன், நான் வைசியன், நான் சூத்திரன், நான் பிரமசாரி நான் கிருகஸ்தன், நான் வானப் பிரஸ்தன், நான் சந்நியாசி, நான் ஆண், நான் பெண், நான் கறுவல், சிவலை, கட்டையன், நெட்டை யன், நான் பருத்தேன், இளைத்தேன் என்று தானாக வழங்குகிற ஸ்தூல சரீரம் ஆறு தத்துவங்களும், மற்றொரு வேளை யிலே தனக்குப் புறம்புபட்டு என் மாடு, என் கன்று என்றாற் போல என் சரீரம் பருத்தது, இளைத்தது, நரைத்தது, என் சரீரம் பிறந்து இத்தனை நாளாயிற் றென்று

தான் வேறு, தூல சரீரம் வேறாக வழங்குகிறபடியினாலும், நான் கண்டேன், கேட்டேன், தொட்டேன், போகித்தேன், கொடுத்தேன், வாங்கினேன், நடந்தேன், புசித்தேன் சிந்தித்தேன், நிச்சயித்தேன், இந்தப் பஞ்சத்திற்குச் சீவித்தேன் என்று தானாக வழங்குகிற சூட்சும சரீர தத்துவங்கள் இருபதும் மற்றொரு வேளையிலே தனக்குப் புறம்புபட்டு என் வீடு என் உடைமை என்றாற் போல என் கண், என் காது, என் மூக்கு, என் நாக்கு, என் கை, என் கால், என் மநம், என் புத்தி, என் அகங்காரம், என் சித்தம், என் பிராணன் என்று தான் வேறு அவைகள் வேறாக வழங்குகிறபடியினாலும், நான் அறிவேன், அறியேன் என்று தானாக வழங்குகிற அஞ்ஞாநமும், சிதாபாசனும் மற்றொரு வேளையிலே தனக்குப் புறம்புபட்டு என் அஞ்ஞாநம் என்சீவன் என்று வழங்கக்கண்டபடியினாலும் இந்த இருபத்தெட்டுத் தத்துவங்களும் தானாகவும், தனக்கு அந்நியமாகவும் வழங்குகின்றது சித்தம்.

இப்படிச் சொன்ன குருவைப் பார்த்துச் சீடன் கேட்கும்படி: இந்த இருபத்தெட்டுத் தத்துவங்களுந் தானானால், சாக்ஷியைப் போல ஒரு தன்மையாகத் தோற்ற வேண்டுமே யல்லாமல், பஞ்ச பூதங்களைப் போலத் தனக் கந்நியமாகக் காணக் கணக் கில்லை. இந்த இருபத் தெட்டும் தனக் கந்நியமேயானால் எப்போதும் புறம்பு பட்டே இருக்கவேண்டு மல்லாமல் தானாக வழங்கக் கணக் கில்லை. தானுமாய், தனக் கந்நியமுமாய் இருக்கு மென்கிறது இருட்டாதித்தன் என்றாற் போலும், வெள்ளாழ தீக்ஷிதன் என்றாற் போலும் விருத்தமா மென் றனுஞ் சங்கைக்கு:— பரமார்த்தமாகத் தான் என்கின்றது ஒரு வகையும், அத்தியா சத்தினாலே தான் என்கின்றது ஒரு வகையும் ஆக இரு வகையும் உண்டு. சாக்ஷி சைதந்நியத்தைத் தான் என்கின்றது பரமார்த்த மல்லாமல் உபசார மல்ல. தனக் கந்நியமா யிருக்கின்ற இந்த இருபத் தெட்டையும்

தான் என்கின்றது கட்டையைக் கள்ள னென்றாற் போலும், பழுதையைப் பாம் பென்றாற் போலும், புத்திர தாராதிகளைத் தான் என்றாற் போலும் மயக்கமே யல்லாமல் உண்மை யல்ல. ஆகையினால் அஞ்ஞாந காலந் தொடங்கித் தா னல்ல வென்று காணப்பட்ட தத்துவங்கள்-7' இப்போது இப்படி விவேகம் பண்ணின பின் தா னல்ல வென்று காணப்பட்ட தத்துவங்கள்-28, ஆக இந்த 35 தத்துவங்களையும் அததற்குச் சொன்ன குணம், குறிகளுடனே கூடக் காண்கின்ற அறிவானது கடத்தைப் பார்க்கின்றவன் கடத்திற்குப் புறம்பாகவே யிருந்து கடத்தைப் பார்கின்றது போல அவைகளை அறிகின்ற தென்றும், முப்பத் தாறாந் தத்துவமாகிய அதுவே தா னென்றும், அதுவே பரமசிவ மென்றும் கலக்க மறத் தெளிர்தவனே சிவ தரிசந முடைய சீவன் முத்த னென்று சொல்லப்படுவ னென் றுத்தாம்.

இப்படிப் பிரமமே தா மென்றும், மற்றை முப்பத் தைந்து தத்துவங்களும் தமக் கந்நிய மென்றும் பிரித் தறியாத அவிவேகி கள், அகங்காரக் கிரந்தியினாலே புத்திர தாராதிகள் தபிக்கின்றதைத் தாம் தபிக்கிறோம் என்கிற மூடகரம் போல இந்த இருபத் தெட்டினுடைய தொழில்களையும் தம் தொழி லென்று மயங்குகின்றபடியினாலே இந்த இருபத்தெட்டினாலும் ஆர்ச்சிக்கப்பட்ட புண் ணிய பாவங்களினாற் கட்டுப்பட்டு அந்தக் கர்மத்தின்படியே சநந மரணாதி சம்சாரத்தி லே அடிபடுகிறோ மென்று மயங்குவர். பிரம சைதந்நியமே தா னென்றும், மற்றை முப்பத் தைந்தும் தா னல்ல வென்றுந் தெளிந்த விவேகியானவன், அகங்காரக்கிர ந்தி யற்றபடியினால் இந்த இருபத் தெட்டி னுடைய தொழில்களையும் நான் செய்ய வில்லை யென்றும், இந்த இருபத் தெட்டும் புசிக்கின்றதை நான் புசிக்க வில்லை யெண்

றும் திடப்படத் தேறி மயக்க மற்றிருக்கின் றபடியினுல் இந்த இருபத் தெட்டினுலும் ஆர்ச்சிக்கப்பட்ட புண்ணிய பாவங்களினின் றும் விடுபட்டுக் கர்ம மில்லாதபடியினுல் சங்கமராஹிதி சம்சார மில்லாமல் முத்தனுய்ப் பிரம மாத்திரமாகவே யிருப்பன். இவனைச் சீவன் முத்த னென்றும், திடப் பிரக்ஞ னென்றும், அதிவர்ணுச்சிரமி யென்றும், குணுதீத னென்றும், பகவற் பத்த னென்றும், பிராமண னென்றும் வாசிட்ட முதலிய சாஸ்திரங்கள் முறையிடுகின்றன. சகலரும் இந்தத் தத்துவங்களை விசாரம் பண்ணி மோக்ஷ மடையக்கடவர்.

நாநா ஜீவ வாதக் கட்டளை

முற்றிற்று.

